**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093608

1. District மாவட்டம் Chennai PS: காவல்நிலையம் VSAC, HQrs Year: ஆண்டு 2019 FIR No.: மு.த.அ. எண் 25 Date: நாள் 03.12.2019

2. (i) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் : 02.12.19 Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு Time from நேரம் முதல் : 12.00 Hrs Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 03.12.19 Time நேரம் : 10.00 Hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 03.12.19 Time நேரம் : 12.00 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் 29 KM. North
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி O/o AE Corporation of Chennai, 34th Division, Zone IV, kodungaiyur, Chennai
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. Narendra Babu (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Kannaian
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் (g) Address : முகவரி No. 6/10 2nd Street, 3rd Cross Street, Gandhi Nagar, kodungaiyur, Chennai

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Tr. Manikandan, Assistant Engineer, 34th Division Zone -IV, Corporation of chennai, kodungaiyur

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

— enclosed in separate sheet —

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

K. Narendra Babu

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

03/12/19

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S. MALARKODI
Rank: நிலை Inspector No. எண் ...

GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)p 2

<u>சமர்பிக்கப்படுகிறது.</u>

<u>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை தலைமையக குற்ற எண்.25/2019 பிரிவு 7 ஊழல் தடுப்பு சட்டம் 2018 (திருத்தம்) வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12ன் தொடர்ச்சி பின்வருமாறு</u>

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சிறப்பு புலானய்வு பிரிவு ஆய்வாளர் S.மலர்கொடி ஆகியநான் இன்று 03-12-2019 தேதி காலை 10.00 மணியளவில் பணியில் இருந்தபொழுது திரு.K.நரேந்திரபாபு,S/o.கண்ணய்யன்,No.6/10 2வது தெரு, 3வது குறுக்கு தெரு, காந்திநகர், கொடுங்கையூர், சென்னை என்பவர் அலுவலகம் ஆஜர் ஆகி என்னிடம் எழுத்து பூர்வமான புகார்மனு ஒன்றை அளித்தார். அவர் அளித்த புகார் மனு பின்வருமாறு:- அனுப்புநர், K.நரேந்திரபாபு,S/o.கண்ணய்யன்,No.6/10 2வது தெரு, 3வது குறுக்கு தெரு, காந்திநகர், கொடுங்கையூர், சென்னை பெறுநர் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, ஆலந்தூர், சென்னை.அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் எனது சொந்த வீட்டில் வசித்து வருகிறேன். சென்னை துறைமுகத்தில் டிரைவராக வேலை செய்து ஓய்வு பெற்றுள்ளேன். எனது மகள் மேனகா ஸ்ரீதர் மற்றும் மருமகன் ஸ்ரீதர் பெயரில் உள்ள கதவு எண்.124, 6வது தெரு, R V நகர், கட்டமொம்மன் மெயின் ரோட், கொடுங்கையூரில் வீடு கட்டி வருகிறார்கள். எனது மருமகன் வேலைக்கு சென்றுவருவதால், வீட்டிற்கான வேலைகளை நான் கவனித்து வருகிறேன். மேற்சொன்ன முகவரில் கட்டிடம் கட்டுவதற்காக முறையாக அனுமதிகளும், Corporationக்கு வரிகளும் செலுத்தியுள்ளார்கள். மேற்படி கட்டிடத்திற்கு கழிவு நீர் இணைப்பிற்காக முறைப்படி அதற்குண்டான கட்டணம் கடந்த 17-12-2018 அன்று செலுத்தியுள்ளார்கள். கழிவுநீர் இணைப்பிற்காக பல முறை சென்னை குடிநீர் மற்றும் கழிநீர் அகற்று வாரிய அலுவலகத்தில் கேட்டபோது, எனது மகளின் வீட்டிற்கு இணைப்பு கொடுக்க வீட்டின் முன், சாலை மறுப்பக்கதிலிருந்து குறுக்கே தோண்டுவதற்கு Corporationல் அனுமதி பெறவேண்டும். எனவே அதற்காக கொடுங்கையூர் பிரிவு-34, மண்டலம்-IV அலுவலகத்தில் உள்ள Corporation AE திரு.மணிகண்டன் அவர்களை நேரில் சென்று பார்க்குமாறு சொன்னார்கள். நான் நவம்பர் இறுதி வாரத்தில் சென்று பார்த்தபொழுது மேற்படி திரு.மணிகண்டன் அவர்கள் என் வீட்டிற்குண்டான ஆவணங்கள் அனைத்தையும் நான் அன்றைய தினமே அவரிடம் எடுத்து சென்று காண்பித்தேன். அவர் ஆவணங்களின் நகல்களை

என்னிடமிருந்து வாங்கிகொண்டு நான் பார்த்துகொள்கிறேன் என்று சொல்லி என்னை அனுப்பிவிட்டார். ஒருவாரம் கடந்தும் எந்த வேலையும் நடக்காததால் மீண்டும் அவரை நேற்று 02-12-2019 அன்று மதியம் சுமார் 12 மணியளவில் அலுவலகம் சென்று பார்த்து என் வேலை பற்றி கேட்டபொழுது ரூபாய் 15,000/- லஞ்சமாக தனக்கு கொடுத்தால் உடனே அனுமதி தருவேன் என்று சொன்னார். நான் அதற்கு என்னால் அவ்வளவு பணம் கொடுக்க முடியாது என்று கூறினேன். அவர் அதற்கு ரூ.10,000/-மாவது கொடுத்தால் தான் அனுமதி தருவேன் என்று கராராக கூறிவிட்டார். நான் அவரிடம் இரண்டு தினங்களில் பணம் எடுத்துக்கொண்டு வருகிறேன் என்று கூறி வந்துவிட்டேன். எனக்கு மேற்படி லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லாததால் இன்று 03-12-2019 தங்களிடம் புகார் அளிக்கிறேன். என்னிடம் லஞ்சம் கேட்ட AE திரு.மணிகண்டன் அவர்கள் மீது நடவடக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு S/d xxx K.Narendra Babu 3.12.2019.

Sir,

The above complaint was received on 03.12.2019 at 10.00hrs and after getting concurrence conducted discreet verification and upon permission, registered a case in V&AC, HQtrs, Cr.No.25/AC/2019/HQ, u/s 7 of Prevention of Corruption ( Amendment) Act 2018 on 03.12.2019 at 12.00 hrs.

(S.Malarkodi),
Inspector of Police,
Vigilance and Anti- Corruption,
Special Investigation Cell,
Chennai-16.